Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC 447/2022

**Depositions of PW- 2**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.கடற்கரைவேல் | Occupation | ஓட்டுநர் உரிமம் கொண்ட வனக்காப்பாளர் |
| Father's name | வேல்முருகன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of October 2025.

16.10.2025

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது ஓட்டுநர் உரிமம் கொண்ட வனக்காபப்பாளராக கோட்ட வன அலுவலகம் சமூக வன கோட்டம் விருதுநகரில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2021 ம் ஆண்டு திருவில்லிபுத்தூர் வனச்சரகத்தில் ஓட்டுநர் உரிமம் கொண்ட வனக்காபப்பாளராக பணியிலிருந்தபோது 13.11.2021 திருவில்லிபுத்தூர் வனச்சரக அலுவலகத்தில் திருவில்லிபுத்தூர் பிரிவு வனவராக இருந்த பாரதி வனவர் அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி சுமார் 10.30 மணியளவில் பெருமாள் பட்டி மேலத்தெருவை சேர்ந்த வழுக்குமண்டை அய்யனார் என்பவருக்கு சொந்தமான வயல்காட்டினை கருத்தப்பாண்டி என்பவர் வருட குத்தகைக்கு எடுத்து பராமரித்து வருகிறார். அவர் பராமரித்து வரும் காடு ரெங்கர் கோவில் பீட் பகுதிக்கு அருகிலுள்ளது. அவர் அங்கு தங்கி பராமரித்து வரும்போது இரவு நேரங்களில் வனப்பகுதியிலிருந்து உடும்பு அவரது காட்டிற்க வருவதை பார்த்துள்ளார். கடந்த 11.11.2021 அன்று இரவு சுமார் 09.00 மணியளவில் கருத்தப்பாண்டி என்பவர் குத்தைக்கு எடுத்து பராமரித்து வரும் காட்டில் அடுத்தடுத்து 3 உடும்புகள் வந்ததை பார்த்து அதை அடித்து சமைத்து அதனுடைய 3 தோள்கள் மற்றும் 2 தலைகளை அவர் பராமரித்து வரும் காட்டில்

ஆழமாக தோண்டி புதைத்து வைத்துள்ளார். ரகசிய தகவலின்படி வனவர் பாரதி, ரெங்கர் தீர்த்தம் வனக்காப்பாளர் பெரியசாமி, மற்றும் அவர் பராமரித்து வரும் சிமி மோப்ப நாய், ரெங்கர் கோவில் வனக்காப்பாளர் லட்சுமி, வெங்கடேஷ்வரபுரம் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நான் அங்கு சென்று பார்த்தபோது மோப்பநாய் உதவியுடன் சோதனை செய்ததில் 3 உடும்பின் தோள் மற்றும் 2 உடும்பின் தலைகள் போன்றவற்றை நாங்கள் கைப்பற்றினோம். அவரிடம் கேட்டபோது இதை நான் தான் செய்தேன் என்று ஒப்புக்கொண்டார். ஸ்தலத்தில் பார்வை மகஜர், குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அப்போது அங்கு இருந்ததால் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்திலும், பார்வை மகஜரிலும் கையொப்பமிட்டேன். மேல்விசாரணைக்காக திருவில்லிபுத்தூர் வனச்சரக அலுவலகம் அழைத்துவரப்பட்டார். அதன் பின்பு எதிரியை திருவில்லிபுத்தூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் 2 நீதிபதி முன் ஆஜர்படுத்தி காவல் அடைப்பு செய்யப்பட்டார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் இடதுபக்கம் 3 வது கையெழுத்தும், ஒப்புதல் வாக்குமூலத்தில் இடதுபக்கமுள்ள 4 வது கையெழுத்தும் என்னுடையதுதான். **பார்வை மகஜரிலுள்ள கையெழுத்து அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.1 என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–இல்லை.</u>**

| |
|---|
| சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.<br><br>நீதித்துறை நடுவர் எண்.2,<br>திருவில்லிப்புத்தூர். |